ஈரோடு மாவட்டம் தூக்கநாயக்கன்பாளையம் வட்டாரம் அக்கரைகொடிவேரி ஊராட்சி

ஊராட்சி மன்றத்தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : திரு.K.சிவக்குமார்,
தலைவர், அக்கரைகொடிவேரி ஊராட்சி.

ந.க.எண்: 1/2024-2025/ அ.கொ நாள்: 06.03.2024

பொருள் மனைப்பிரிவு இறுதி அங்கீகாரம் - தூக்கநாயக்கன்பாளையம் வட்டாரம் - அக்கரைகொடிவேரி ஊராட்சி - அக்கரைகொடிவேரி கிராமம் - க.ச.எண்: 58/2A ல் கொங்குநகர் 1 மனைப்பிரிவில் அமைந்துள்ள 34 மனையிடங்களுக்கு இறுதி அங்கீகாரம் வழங்கி உத்தரவிடுதல் - சார்பு

பார்வை 1. அரசாணை (நிலை) எண்: 166, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (ந.வ.4(1) துறை நாள்: 21.11.2023.
2.இணை இயக்குநர், நகர் ஊரமைப்பு துறை, சென்னை அவர்களின் ந.க.எண்: RWKA74HC/2023/TCP நாள்: 19.08.2023
3. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், ஈரோடு அவர்களின் மனையிட வரைபட அங்கீகாரம் எண்: SWP/DTCP/ERODE/LAYOUT APPROVAL NO: 343/2023 DATE : 19.08.2023.
4.திரு.A.S.அருண் த/பெ M.N.சண்முகசுந்தரம் க/பெ எண்: 4/21, கணக்குபிள்ளை வீதி, அக்கரைகொடிவேரி என்பவரது விண்ணப்பம் நாள்: 26.02.2024.

உத்தரவு:

பார்வை 2 ல் காணும் இணை இயக்குநர் அவர்களின் கடிதல்தில் ஈரோடு மாவட்டம் தூக்கநாயக்கன்பாளையம் வட்டாரம் அக்கரைகொடிவேரி ஊராட்சி அக்கரைகொடிவேரி கிராமம் க.ச.எண்: 58/2A ல் கொங்குநகர் 1 மனைப்பிரிவில் 34 மனையிடங்கள் அமைத்து ஆண்லைன் மூலம் விண்ணப்பித்து ஒப்புதல் பெற்றுள்ளதாகவும் இறுதி ஒப்புதல் அக்கரைகொடிவேரி ஊராட்சி மூலம் வழங்கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை 3 ல் காணும் நகர் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், ஈரோடு அவர்களின் மனையிட வரைபட அங்கீகாரம் எண்: SWP/DTCP/ERODE/LAYOUT APPROVAL NO: 343/2023 DATE : 19.08.2023 ன்படி அக்கரைகொடிவேரி கிராமம் க.ச.எண்: 58/2A ல் கொங்குநகர் 1 மனைப்பிரிவில் 34 மனையிடங்கள் அமைத்துள்ளமைக்கான வரைபட அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 4 ல் திரு.A.S.அருண் த/பெ M.N.சண்முகசுந்தரம் என்பவர் சத்தியமங்கலம் சார்பதிவாளர் அலுவலகம் பத்திர பதிவு எண்:1148/15.02.2023 ன்படி நெ.பு.ஹெ 0.82.45 அல்லது 2.03 ¾ ஏக்கர் அல்லது 8245.00 ச.மீ விஸ்தீர்ணமுள்ள பூமியை கிரையம் பெற்று கொங்குநகர் 1 மனைப்பிரிவு என பெயரிடப்பட்டு 34 மனையிடங்கள் அமைத்து இறுதி அங்கீகாரம் வழங்கக் கோரியுள்ளார். திரு.A.S.அருண் என்பவரின் விண்ணப்பம் பரிசீலித்ததில் உரிய அரசு தலைப்புகளில் தொகை செலுத்திய விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனைபிரிவு அமைந்துள்ள ஊராட்சி மற்றும் குக்கிராமத்தின் பெயர்	பத்திர பதிவு விபரம்/ க.ச.எண்/ பரப்பளவு (ச.மீ)	34 மனையிடத்திற்கு செலுத்த வேண்டிய வளர்ச்சிக் கட்டணம்	நில மதிப்பிற்கு 3 % மாற்றும் கட்டணம்	ஊராட்சி அபிவிருத்திக் கட்டணம்
அக்கரைகொடிவேரி, அக்கரைகொடிவேரி கிராமம்	ரீ.சர்வே எண்: 58/2A பரப்பளவு நெ.பு.ஹெ 0.82.45 அல்லது 2.03 ¾ ஏக்கர் அல்லது 8245.00 ச.மீ	34,000/-	30,600/-	20,000/-

நிபந்தனைகள்:

1. நில உரிமம் குறித்து மனுதாரர் சமர்ப்பித்த ஆவணங்கள் மற்றும் சான்றுகளின் அடிப்படையில் இவ்வுத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் / சான்றுகள் தவறானவை என அறியப்பட்டால் இவ்வுத்தரவு செல்லத்தக்கதல்ல.
2. பார்வையில் காணும் அரசாணைகளின்படி நிர்ணயிக்கப்பட்டு மனுதாரர் செலுத்தப்பட்ட கட்டணங்களில் ஏதேனும் குறைவு என பின்னர் ஆய்வு/ தணிக்கையில் கண்டறியப்பட்டால் நிலுவைத் தொகையினை அவர் செலுத்த வேண்டும்.
3. இவ்வுத்தரவு அக்கரைகொடிவேரி சர்வே எண்: 58/2A கொங்குநகர் 1 ல் அமைந்துள்ள 34 மனையிடங்களுக்கு மட்டுமே பொருந்தும்.
4. வரன்முறை செய்யப்படும் மனையினை குடியிருப்பு பயன்பாட்டுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.
5. பார்வையில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாணைகளின் நிபந்தனைகளில் இம்மனைப்பிரிவுகள் மீறப்பட்டிருப்பின் இவ்வுத்தரவு எந்தவித முன்னறிவிப்பு ஏதுமின்ற இரத்து செய்யப்படும்.
6. இவ்வரன்னுறை தொடர்பாக அரசால் அவ்வப்போது வெளியிடும் உத்தரவுகள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கு மனுதாரர் கட்டுப்பட்டவராவார்.
7. உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட சாலைகள் வழியாக மட்டும் ஒரே சீராக மின்கம்பங்கள் அமைத்து மின்சார வசதி ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

மேற்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு பார்வை 1 முதல் 4 வரையிலான அனுமதி மற்றும் அரசாணைகளின்படி அக்கரைகொடிவேரி ஊராட்சி ரீ.ச.எண்: 58/2A கொங்குநகர் 1 ல் அமைந்துள்ள 1 முதல் 34 வரையிலான மனையிடங்களுக்கு இறுதி வரன்முறை வழங்கி மனைப்பிரிவு அமைப்பின் வரைபடம் அங்கீகாரம் செய்து உத்தரவிடப்படுகிறது.

இணைப்பு : வரைபடம்

K. [illegible] 06/03/2024

தலைவர்,
அக்கரைகொடிவேரி ஊராட்சி.

பெறுதல்: திரு.A.S.அருண்
த/பெ M.N.சண்முகசுந்தரம்,
4/21, கணக்குபிள்ளை வீதி,
அக்கரைகொடிவேரி ஊராட்சி,
கோபி தாலூக்கா, ஈரோடு மாவட்டம். 608454.

நகல் : நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்கள், ஈரோடு மண்டலம்.
நகல் : ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர்(ஊ) அவர்கள், ஈரோடு மாவட்டம்.
நகல் : வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) அவர்கள், தூக்கநாயக்கன்பாளையம் வட்டாரம்.

அக்கரைகொடிவேரி ஊராட்சி • ஈரோடு மாவட்டம். • தூக்கநாயக்கன்பாளையம் ஒன்றியம்